# புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2019-2020 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.2027/2017 (புமசு), நாள் 11.09.2017-ன்படி புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, அறக்கட்டளைப் பத்திரமானது 21.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 69/2017, நாள் 22.09.2017-ன்படி புதுக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| | **மேலாண்மை குழு அமைப்பு** |
|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், புதுக்கோட்டை |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, புதுக்கோட்டை |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை |
| 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (ஊராட்சிகள்) (PAPD), புதுக்கோட்டை |
| 6. | உதவி இயக்குநர், (கிராம ஊராட்சிகள்) புதுக்கோட்டை |
| 7. | மாவட்ட ஆதிதிராடர் நல அலுவலர், புதுக்கோட்டை |
| 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், புதுக்கோட்டை |
| 9. | மாவட்ட வன அலுவலர், புதுக்கோட்டை |
| 10. | மண்டல தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி |
| 11. | உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, புதுக்கோட்டை |
| 12 | மாவட்ட கருவூல அலுவலர், புதுக்கோட்டை |
| 13. | மாவட்ட சமூக நல அலுவலர், புதுக்கோட்டை |
| 14 | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்)<br>சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை |

| **வ. எண்.** | **நிர்வாகக் குழு அமைப்பு** |
|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், புதுக்கோட்டை |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, புதுக்கோட்டை |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், புதுக்கோட்டை |
| 7. | மாவட்டக் கருவூல அலுவலர், புதுக்கோட்டை |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், புதுக்கோட்டை |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), புதுக்கோட்டை |

புதுக்கோட்டை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, புதுக்கோட்டை கீழராஜவீதி, பாரத வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.**37194593855)** துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பிலுள்ள 242 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 93 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 149 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 162 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2020-வரை ரூ.**5,67,23,182**/- (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்து மூன்றயிரத்து நூற்றி எண்பத்து இரண்டு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலம் பெறப்பட்ட தொகையில் சுரங்கம் / குவாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் **பிரதான் மந்திரி கானிஜ் க்ஷேத்ரா கல்யாண் யோஜனா*(Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana - PMKKKY)*** திட்டத்தின்கீழ் ரூ.44,40,000/- **(நாற்பத்து நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)** மதிப்பீட்டில் கீழ்கண்ட 18 பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிகளில் வரிசை எண்.1 முதல் 12 வரை உள்ள திட்டப்பணிகளுக்கு இதுநாள் வரை ரூ.1800000/- (பதினெட்டு இலட்சம் மட்டும்) திட்டப்பணிகளை மேற்கொள்ளும் அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எ ண். | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமையா/ பிறமுன்னுரிமை திட்டமா? |
|---|---|---|---|---|---|
| 1. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 400000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 2. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 400000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (மதியநல்லூர் கிராமம்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 4. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (முக்கணாமலை ப்பட்டி) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 5. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (புல்வயல்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 6. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (சத்தியமங்கலம் கிராமம்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 7. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (நார்த்தாமலை கிராமம்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 8. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (வெள்ளனூர் கிராமம்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 9. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (பரம்பூர்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 10. | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (இராசநாயக்கன் பட்டி கிராமம்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 11 | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (கோனாப்பட்டு கிராமம்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 12 | மருத்துவ நோக்கம் | மருத்துவ கருவிகள் (புலியூர்) | 100000 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 13. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 440000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 14. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 440000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 15. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 440000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 440000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 17. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 440000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 18. | புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல் | 440000 | வட்டார வளர்ச்சி அலுவலர், அன்னவாசல் | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| | | | 4440000 | | |

மேற்கண்ட பதினெட்டு திட்டங்களில் முதல் இரண்டு திட்டங்கள் முற்றிலும் நிறைவு பெற்று நடைமுறைப்படுத்தும் அமைப்பிடமிருந்து பயன்பாட்டுச் சான்று பெறப்பட்டு புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பதினாறு திட்டங்களில் பத்து திட்டங்கள் நிறைவுற்று நடைமுறைப்படுத்தும் அமைப்பிடமிருந்து பயன்பாட்டுச்சான்று பெறும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள ஆறு திட்டங்கள் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளன.

புதுக்கோட்டை மாவட்ட கனிம அறக்கட்டளைக்கென 31.03.2020 வரை பல்வேறு வகைகளில் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ.**5,67,23,182/-** (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்து மூன்றயிரத்து நூற்றி எண்பத்து இரண்டு மட்டும்) ஆகும். அதில் இதுவரை செலவினம் செய்யப்பட்ட தொகை ரூ.**18,00,000/-** போக மீதித்தொகை ரூ.**5,46,85,903/-** அறக்கட்டளை வங்கி சேமிப்புக் கணக்கில் 2019-20 நிதியாண்டின் முடிவில் இருந்து வருகிறது.

தலைவர்,
புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை மற்றும்
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை